**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness – PW 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பிரதீஸ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025.
(A2 to A4 Present. A1 died ).

முதல் விசாரணை–

நான் திவண்டகோட்டையில் வசித்து வருகிறேன். நான் பைபர் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.1ம் எதிரி அனித் ஆஜர் இல்லை. முதலில் நிற்கும் எதிரியின் பெயர் ராகுல், 2 வது நிற்கும் எதிரியின் பெயர் முகேஷ், 3 வதாக நிற்கும் எதிரியின் பெயர் ஜெகதீஸ். 06.01.2020 தேதியன்று மாலை 4 மணியவில் அனித், முகேஷ், ராகுல் மற்றும் ஜெகதீஸ் ஆகியோர் அண்ணாதுரையை இருசக்கர வாகனத்தில் வந்து அடித்தார்கள். அப்போது நான் அம்மாண்டிவிளை ஜங்சனில் இருந்து வந்தேன். நான் ஓடிபோய் தடுக்கபோனேன், அப்போது ஆஜர் எதிரிகள் ஓடிவிட்டார்கள். அண்ணாதுரையின் மனைவி ஆட்டோ பிடித்து PPM மருத்துவமனைக்கு அவரை அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய விபரங்களை தான் நான் போலீசார் என்னை விசாரித்தபோதும் கூறினேன். சம்பவத்திற்கு முன்பே ஆஜர் எதிரிகள் மற்றும் அவர்களுடைய பெயர் விபரங்கள் எனக்கு தெரியும். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட தேதி, நேரத்தில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், நான் அ.சா.1 அண்ணாதுரைக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness – PW 6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மணிகண்டன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025.
(A2 to A4 Present. A1 died ).
முதல் விசாரணை–

நான் மாவிளையில் வசித்து வருகிறேன். நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் குடிநீர் பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ–2 ஆகும். வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ–3 ஆகும். அதிலும் எதுவும் எழுதப்படவில்லை. போலீசார் என்னை விசாரிக்க வில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 01.06.2020 அன்று இரவு 10.30 மணிக்கு அம்மாண்டிவிளை வாணி ஸ்டுடியோ அருகில் நிற்கும்போது மணவாளகுறிச்சி காவல் நிலைய குற்ற எண்.233/2020 இதச 294 b, 323, 324, 307, 506(2) வழக்கில் சம்பவ இடத்தையும் , அதன் சுற்றுபுறத்தையும் காவல் ஆய்வாளர் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும் என்னு உடன் இருந்து ரவிகுமார் என்பவரும் கையொப்பம் போட்டோம். சம்பவ இடத்தில் கைபற்றிய இரண்டு கண்ணாடி துண்டுகளையும், இரண்டு கருகற்களையும் அத்தாட்சியில் கைபற்றியபோது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுடன்

சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 50/2024**
**Prosecution Witness – PW 7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெகன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025.
(A2 to A4 Present. A1 died ).
<u>முதல் விசாரணை</u>–

நான் மாவிளையில் வசித்து வருகிறேன். நான் சிவில் இன்சினியரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் 1 மற்றும் 2ம் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. சாட்சி ராஜகுமார் என்பவரை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 02.06.2020 அன்று காலை 9.45 மணிக்கு நானும், ராஜகுமார் என்பவரும் சொந்த வேலையாக குளச்சல் சென்றுவிட்டு களிமார் பினு மருத்துவமனை அருகில் சென்றபோது, TN 75 AH 2274 என்ற பல்சர் வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை மணவாளகுறிச்சி காவல் ஆய்வாளர் பிடித்து விசாரித்தபோது , எதிரி அனித் மற்றும் ராகுல் ஆகியோர் 01.06.2020 அன்று மாலை 4 மணிக்கு அம்மாண்டிவிளையில் ஒரு நபரை தாக்கி கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அவர்கள் தங்கள் மீது புகார் கொடுத்ததால் அதிலிருந்து தப்பித்து கொள்ள தாங்கள் இருவரும் மாறி மாறி கத்தியால் உடம்பை கிழித்துக்கொண்டு பினு மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்ததாகவும், குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை காவல் ஆய்வாளர் கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரித்தார் என்றும், அப்போது 1வது எதிரி அனித் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்,

அதில் நானும் ராஜகுமாரும் கையொப்பம் செய்தோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர்கள் ஓட்டி வந்த பல்சர் Tn 75 AH 2274 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும், அந்த அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.50/2024**
**Prosecution Witness – PW 8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராஜகுமார் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.11.2025.
(A2 to A4 Present. A1 died ).
முதல் விசாரணை–

நான் ஒற்றை குட்டியான் விளையில் வசித்து வருகிறேன். நான் எலட்ரீசியன் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அந்த அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ–5 ஆகும். அந்த கையொப்பங்களை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். எனக்கு சாட்சி ஜெகனை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 02.06.2020 அன்று காலை 9.45 மணிக்கு நானும், ஜெகனும் என்பவரும் சொந்த வேலையாக குளச்சல் சென்றுவிட்டு களிமார் பினு மருத்துவமனை அருகில் சென்றபோது, TN 75 AH 2274 என்ற பல்சர் வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை மணவாளகுறிச்சி காவல் ஆய்வாளர் பிடித்து விசாரித்தபோது , எதிரி அனித் மற்றும் ராகுல் ஆகியோர் 01.06.2020 அன்று மாலை 4 மணிக்கு அம்மாண்டிவிளையில் ஒரு நபரை தாக்கி கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அவர்கள் தங்கள் மீது புகார் கொடுத்ததால் அதிலிருந்து தப்பித்து கொள்ள தாங்கள் இருவரும் மாறி மாறி கத்தியால் உடம்பை கிழித்துக்கொண்டு பினு மருத்துவமனையில் சிகிட்சையில் இருந்ததாகவும், குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை காவல் ஆய்வாளர் கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரித்தார் என்றும், அப்போது 1 வது எதிரி அனித் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்,

அதில் நானும் , ஜெகனும் கையொப்பம் செய்தோம் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர்கள் ஓட்டி வந்த பல்சர் TN 75 AH 2274 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார் என்றும், அந்த அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**